ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1613 - 2009 ජූලි 31 වැනි සිකුරාදා - 2009.07.31
*1613 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 920 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 924 |


**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி V இல் புத்தகப் பட்டியலொன்று (ஏப்பிறல் - யூன், 2006) ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வராராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2009, ஓகத்து மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, யூலை மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி – கொழும்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுகளுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009, புரட்டாதி மாதம் 01 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2009, ஆனி மாதம் 30 ஆந் திகதி.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 1. கொழும்பு | கொழும்பு | அலுத்கட பிரிவு பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , கொழும்பு 12 |
| 2. கொழும்பு | கொழும்பு | நியூ பசார் பிரிவு பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , கொழும்பு 12 |
| 3. கொழும்பு | கொழும்பு | மருதானை பிரிவு பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , கொழும்பு 12 |

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 4. கொழும்பு | கொழும்பு | மோதரை பிரிவு பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , கொழும்பு 12 |
| 5. கொழும்பு | கொழும்பு | கொட்டாஞ்சேனை பிரிவு பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , கொழும்பு 12 |

7-755

---

## காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு

*காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்*

*கணனி இயக்குனர் பதவிக்கு ஆட்சேர்த்தல்*

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தில் கணனி இயக்குனர் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. விண்ணப்பப்பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி 2009, ஓகத்து 14 ஆகும்.

2. **தகைமைகள்.-** அனைத்து விண்ணப்பதாரர்களும்-

2.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

2.2 சிறந்த குணநலத்தினையும் சிறந்த உடல் ஆரோக்கியத் தினையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

2.3 விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்கு குறையாமலும் 40 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச சேவையில்/ மாகாண அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு மேற்படி வயதெல்லை ஏற்புடையதன்று)

3. **கல்வித் தகைமைகள்.-** (அ) சிங்கள மொழி/தமிழ் மொழி அல்லது இலக்கியம், கணிதம், ஆங்கில மொழியுடன் இரசாயனம்/ உயிரியல்/ பௌதீகம் ஆகிய பாடங்களில் ஒன்றுடன் ஐந்து பாடங்களில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருப்பதுடன் ஆறு பாடங்களில் இரண்டிற்கு மேற்படாத முறைகளில் கல்விப் பொதுத் தராதர (சாதாரண) பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். (ஒரே தரத்தில் ஐந்து பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்).

அல்லது

(ஆ) கணிதம், சிங்களம், தமிழ்மொழி, விஞ்ஞானம் ஆகிய பாடங்களுடன் ஆங்கில மொழி உள்ளடங்கலாக ஐந்து பாடங்களில் சிறப்புத் தேர்ச்சியுடன் ஆறு பாடங்களில் இரண்டிற்கு மேற்படாத முறைகளில் கல்விப் பொதுத் தராதர (சாதாரண) பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். (ஒரே தரத்தில் ஐந்து பாடங்களாவது சித்திபெற்றிருத்தல் வேண்டும்.)

அல்லது

(இ) முதல் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கில மொழி ஆகிய பாடங்களுடன் ஐந்து பாடங்களில் ஏ அல்லது பி தரத்தில் கூடிய சித்தியுடன் ஆறு பாடங்களில் இரண்டிற்கு மேற்படாத முறைகளில் தேசிய பொதுக் கல்வித் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். (ஒரு முறையில் ஐந்து பாடங்களாவது சித்திபெற்றிருத்தல் வேண்டும்.)

4. **தொழிற்பயிற்சி அறிவும் நிபுணத்துவமும்.-** (அ) அங்கீகரிக்கப் பட்ட நிறுவனம் ஒன்றில் ஆறு மாதத்திற்கு குறையாத கணனி பாடநெறியினை பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும். இப்பாடநெறி யானது தற்போது பாவனையில் உள்ள சொல் முறை வழிப்படுத்தல் (Word Processing), விரிதாள் (Spread sheet), தரவுத்தளம் (Data Base), பணி செயல் முறைமை (Operating System) ஆகியவற்றினை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

அத்துடன்

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கணனி இயக்குனராக ஆறுமாத கால அனுபவத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத் திட்டம்.-** ரூபா 13,120-10x145-11x170-10x240-10x320-ரூபா 22,040

இப்பதவிக்கு நியமனம் பெற்று நான்காவது வேதன ஏற்றத்தினை பெறமுதல் முதலாவது தடைதாண்டல் பரீட்சையிலும், ஏழாவது வேதன ஏற்றத்தினைப் பெறமுன்பு இரண்டாவது தடைதாண்டல் பரீட்சையிலும் சித்திபெறல் வேண்டும்.

*முதலாவது தடைதாண்டல் பரீட்சை.-* தாபனக்கோவை, நிதிப் பிரமாணங்கள் தொடர்பான பரீட்சையில் சித்தியடைதல். அதற்கென சிபார்சு செய்யப்பட்டுள்ள பாடங்கள், பரீட்சை முறை என்பன முதலாவது இணைப்பில் காணப்படுகின்றன.

*இரண்டாவது தடைதாண்டல் பரீட்சை.-* அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் குறைந்தது ஆறுமாத காலத்திற்கு குறையாத கணனி விஞ்ஞானம் தொடர்பான டிப்ளோமா பாடநெறியினை சம்பூரணப்படுத்தல் வேண்டும். மேற்படி பாடநெறி பகுதி நேர பாடநெறியாக அமைந்திருக்கும். டிப்ளோமா பாடநெறியினை சம்பூரணப்படுத்துவதற்கு தேர்ந்தெடுக்கின்ற நிறுவனத்தின் பெயரினை திணைக்களத் தலைவருக்கு அறிவித்து அவரின் அனுமதியினை அந்நிறுவனத்தில் டிப்ளோமா பாடநெறியினை சம்பூரணப்படுத்துவதற்காக பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

6. **ஆட்சேர்க்கும் முறை**.- அரச வர்த்தமானியில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு பொது நிர்வாக சுற்றுநிருப இலக்கம் 15/90 இன்கீழ் தொழிற்பயிற்சி பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு அமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவதன் மூலம் தெரிவு இடம்பெறும். புள்ளி அடிப்படையில், அதிஉயர் புள்ளிகளைப் பெற்ற 25 நபர்கள் மாத்திரமே தொழிற்பயிற்சி பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள். தொழிற்பயிற்சி பரீட்சையில் குறைந்தது 50% புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். தொழிற்பயிற்சி பரீட்சையில் வழங்கப்படும் புள்ளிகளும் நேர்முகப் பரீட்சையில் வழங்கப்படும் புள்ளிகளும் சேர்க்கப்பட்டு அதிக புள்ளிகளைப் பெறுவோர் தேர்ந்தெடுக்கப்படுவர். தற்போதுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை 01 ஆகும். இவ்வெற்றிடம் கொழும்பு பிரதான அலுவலகத்திலேயே உள்ளது. தொழிற்பயிற்சி பரீட்சை நடாத்துவதற்கான வளம் உரிய திணைக்களத்தில் காணப்படாதபோது அதற்காக தேசிய முகாமைத்துவ நிறுவனத்திலோ அல்லது கணனி தொழில்நுட்ப சபையிலோ உதவி பெற்றுக்கொள்ளப்படும். தொழிற் பயிற்சி பரீட்சையின்போது 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்படும் விடயங்கள் தொடர்பான கோட்பாடு, நடைமுறை அனுபவம் பற்றி மதிப்பீடு செய்யப்படும்.

அமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சை குறைந்தது 3 பதவி நிலை உத்தியோகத்தர்களைக் கொண்டிருக்கும். மேற்படி நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கும் முறை பின்வருமாறு அமைந்திருக்கும் :-

| | | புள்ளிகள் |
|---|---|---|
| (i) | ஆறு மாதத்திற்கு மேற்பட்ட பாடநெறியினை பூரணப்படுத்தியிருப்பின் ஆறு மாதத்திற்கு 2 புள்ளிகள் என்ற அடிப்படையில் அதி கூடியது | 15 |
| (ii) | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஆறு மாத காலத்திற்கு மேலதிகமாக கணனி இயக்குனராக பெற்றுள்ள அனுபவத்திற்கு ஆறு மாத காலத்திற்கு 2 புள்ளிகள் என்ற அடிப்படையில் அதிகூடியது | 20 |
| (iii) | நேர்முகப் பரீட்சை | 15 |
| | மொத்தப் புள்ளிகள் | 50 |

7. **சேவையில் சேர்த்துக்கொள்ளும் நிபந்தனைகள்**.- இப்பதவி நிரந்தரமானது ஓய்வூதிய உரித்துடையது. மேலும், விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும். தாங்கள் காலத்துக்குக்காலம் அரசாங்கம் பிரகடனப்படுத்தும் விதத்தில் இந்த நிதியத்திற்கு உதவுத்தொகைகள் செலுத்தல் வேண்டும்.

8. **சேவை நிபந்தனைகள்**.- தாபனக் கோவையின் II அத்தியாயம் 10-12 வரையிலான உறுப்புரைகள் பதவிக்கு தகுந்தவாறு ஏற்புடையதாகும்.

9. **விண்ணப்பிக்கும் முறை**.- மேற்படி அறிவித்தலின் இறுதியில் காணப்படுகின்ற விண்ணப்பத்திற்கு ஏற்ப 8 1/2 x 13 1/2 அங்குல அளவுடைய காகிதத்தில் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை பிழையின்றி சம்பூரணப் படுத்தி 2009, ஓகத்து 21 ஆந் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு "காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம், இல. 07, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை, கொழும்பு 07" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். தற்போது அரச சேவை/ மாகாண அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவத்தினை தமது அலுவலகத் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கணனி இயக்குனர் பதவி" என்று குறிப்பிடப்படுதல் வேண்டும். சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, அரச பாடசாலை அதிபர், அரச உத்தியோகத்தர், பௌத்த விஹாரையின் விஹாராதிபதி வேறு மதத் தலைவர்கள் அல்லது வேறு பொறுப்பு வாய்ந்த பதவி வகிக்கும் ஒருவரினால் பதவி முத்திரையிட்டு கையொப்பம் சான்றுபடுத்தப்படல் வேண்டும். விண்ணப்பப்பத்திரம் கிடைத்தது பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்படுகின்ற விண்ணப்பங்கள் உரிய தகைமைகள் கொண்டிராத விண்ணப்பங்கள், சரியான முறையில் சம்பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் என்பவை நிராகரிக்கப்படும். தபாலில் காணாமற்போகும் விண்ணப்பங்களுக்கான பொறுப்பினை இவ்வலுவலகம் ஏற்றுக்கொள்ள மாட்டாது. தபாலில் ஏற்படும் காலதாமதத்தினை இல்லாமல் செய்வதற்காக நேரகாலத்தோடு விண்ணப்பப்படிவத்தினை தபாலில் அனுப்புமாறு விண்ணப்பதாரிகள் வேண்டப்படுகின்றனர்.

**குறிப்பு** :

(1) வெற்றிடங்கள் கொழும்பில் அமைந்துள்ள காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்திலேயே உள்ளது.

(2) பரீட்சை, நேர்முகப் பரீட்சை ஆகியவற்றிற்கு அழைக்கப் படுகின்ற விண்ணப்பதாரர்களுக்கு பிரயாணச் செலவு, வேறு செலவுகள் வழங்கப்பட மாட்டாது.

(3) மேற்படி அறிவித்தலில் உள்ளடக்கப்படாத விபரங்கள் தொடர்பாக பொது சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப காணி ஆணையாளர் நாயகத்திற்கு தீர்மானம் எடுக்க முடியும்.

எஸ். டி. ஏ. பி. பொரலஸ்ஸ,
காணி ஆணையாளர் நாயகம்.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
இல. 07, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை,
கொழும்பு 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

கணனி இயக்குனர் பதவிக்கு விண்ணப்பம் கோரல் (வெற்றிடம் 01)

(அலுவலகப் பாவனைக்கு மாத்திரம்)

1. 1.1 முதல் எழுத்துக்களுடன் பெயர் :

(i) சிங்களத்தில்/தமிழில் :———.
(ii) ஆங்கிலத்தில் (IN BLOCK LETTERS) :———.

1.2 முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்களுடன் முழுப் பெயர் (தெளிவான எழுத்துக்களில்) :-

(i) சிங்களத்தில்/தமிழில் :———.
(ii) ஆங்கிலத்தில் (IN BLOCK LETTERS) :———.

2. சொந்த முகவரி :———.
பிரதேச செயலாளர் பிரிவு :———.
மாவட்டம் :———.

3. அலுவலக முகவரி (தொழில் பார்ப்பின்) :———.

4. பிறந்த திகதி :———.
2009, ஓகத்து 14 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் :———, மாதங்கள் :———, நாட்கள் :———.

5. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :———.

6. பால் (ஏற்புடைய கட்டத்தில் ‘ x ’ இடவும்) :

பெண் ☐ ஆண் ☐

7. விவாகமானவரா ?/விவாகமாகாதவரா ? :———.

8. இனம் :———.

9. இலங்கைப் பிரசையா :———.

பரம்பரை மூலம் :———.
பதிவு மூலம் :———.

10. கல்வித் தகைமைகள் :

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சை/தேசிய பொதுக் கல்வித் தராதரப்பத்திர (சாதாரண தர) பரீட்சை :–

பரீட்சை இலக்கம் :———. வருடம் :———. மொழிமூலம் : ———.

| சித்தியெய்திய பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சை :———.

பரீட்சை இலக்கம் :———. வருடம் :———. மொழிமூலம் : ———.

| சித்தியெய்திய பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

(iii) தொழிற்பயிற்சி பற்றிய விபரங்கள் :

| பூரணப்படுத்தியுள்ள பாடநெறி | நிறுவனம் | விடயங்கள் | இறுதிப் பரீட்சைப் பெறுபேறு |
|---|---|---|---|
| | | | |

12. அனுபவம் பற்றிய விபரங்கள் :———.

13. தற்போது ஏதாவது பதவி வகுப்பின் அதுபற்றிய விபரங்கள் :

(i) பதவி, வகுப்பு/தரம் :———.
(ii) பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :———.
(iii) நிறுவனம் :———.
(iv) ஓய்வூதிய உரித்துடையதா ? :———.
(v) தற்போது கிடைக்கும் வருடாந்த திரட்டிய சம்பள முறை, தற்போதைய சம்பளம் :———.

14. ஏதாவது குற்றமொன்றிற்காக நீதிமன்றமொன்றில் குற்றவாளியாக காணப்பட்டீரா ? அப்படியாயின் அதுபற்றிய விபரம் :———.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டியவரை உண்மையானவை எனவும், சரியானவை எனவும் உறுதிமொழிகிறேன். அதுபோன்று அரச சேவையை விட்டும் நீக்கப்பட அல்லது பதவியை விட்டும் விலகியவராக கணிக்கப்படாதவர் எனவும் உறுதிகூறுகின்றேன். இதில் ஏதாவது ஒரு பகுதி பூரணப்படுத்தப்படாமையால் அல்லது பிழையான முறையில் பூரணப்படுத்தியமையால் ஏற்படக்கூடிய நஷ்டத்தினைப் பொறுப்பெடுக்க நான் இணங்குகிறேன். இதில் அனைத்து பகுதியையும் பிழையின்றி பூரணப்படுத்தியிருப்பதாகவும் உறுதிகூறுகின்றேன். என்னால் இதில் உறுதிகூறப்பட்டுள்ளவை உண்மையற்றதாகவோ, பிழையானதாகவோ நான் தெரிவுசெய்யப் பட முதல் அறியப்படின் நான் தகுதியற்றவராவதுடன், நியமிக்கப்பட்ட பின்பு உண்மையற்றதாகவோ, பிழையானதாகவோ தெரியவரின் நியமனம் நஷ்டஈடுகள் எதுவுமின்றி இரத்துச் செய்யப்படும் என்பதையும் நான் அறிவேன்.

———,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :———.

**விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ............................................. எனும் பெயருடையவரை நான் தனிப்பட்ட முறையில் தெரிந்திருப்பதுடன் அவர் எனக்கு முன்னால் மேற்படி கையொப்பத்தினை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

———,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :———.
பதவி :———.
முகவரி :———.
(அலுவலக முத்திரையைப் பதிக்கவும்.)
திகதி :———.

**அரசாங்க சேவை/மாகாண அரச சேவையில் பதவி வகிப்பவராயின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

திரு./திருமதி/செல்வி ..................................................... இன் விண்ணப்பப்படிவத்தினை முன்வைக்கின்றேன். அவர் இவ்வமைச்சில்/திணைக்களத்தில் நிரந்தர/தற்காலிக/அமைய உத்தியோகத்தராக சேவையாற்றுவதாகவும் மேற்படி பதவிக்கு நியமிக்கப்படின் அவரை சேவையிலிருந்து விடுக்க முடியும்/முடியாது எனவும் அறியத் தருகின்றேன்.

———,
திணைக்களத் தலைவர்/அவருக்குப் பதிலாக கையொப்பமிடுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்.

பதவி :———.
அமைச்சு/திணைக்களம் :———.
திகதி :———.

**கணனி இயக்குனர் பதவிக்கு முதலாம் தடைதாண்டற் பரீட்சைக்காக விதந்துரைக்கப்பட்ட பாடங்கள்**

1. இப்பரீட்சை காணி ஆணையாளரினால் நடாத்தப்படும். திணைக்களத்தின் வசதிகளைப் பொறுத்து பரீட்சையை நடாத்தும் காலம் நிர்ணயிக்கப்படும்.

2. பரீட்சை வினாத்தாள் 50 வினாக்களுடன் கூடிய ஒரு மணித்தியால பலவகைப்பட்ட வினாப்பத்திரமாகும் :

   (i) தாபனக்கோவை (1985 ஆம் ஆண்டில் தாபனக்கோவை) (30 வினாக்கள்)
   (ii) நிதிப் பிரமாணங்கள் (20 வினாக்கள்)

ஒரு சரியான விடைக்கு இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும். சித்தியெய்தும் புள்ளி 40 ஆகும்.

**விதந்துரைக்கப்பட்ட பாடங்கள் :**

(I) தாபனக்கோவை (1985 ஆம் ஆண்டில் தாபனக்கோவை) :

   (i) சேவைக்கு ஆட்சேர்க்கும் முறை.- நியமனம் (II ஆம் அத்தியாயம்)
   (ii) மாதாந்தச் சம்பளம், நிரந்தரமற்ற, நிரந்தர பதவிகள், ஓய்வூதிய உரித்தினை வழங்குதல் (IV ஆம் அத்தியாயம்)
   (iii) விடுவிப்பு (V ஆம் அத்தியாயம்)
   (iv) சம்பளம் (VII ஆம் அத்தியாயம்)
   (v) மேலதிக கொடுப்பனவு போன்றவை (VIII ஆம் அத்தியாயம்)
   (vi) லீவு (XII ஆம் அத்தியாயம்)
   (vii) சம்பளம், கடன், முற்பணம் (XXIV ஆம் அத்தியாயம்)
   (viii) சாதாரண நடத்தையும் ஒழுக்கமும் (II ஆம் பகுதியில் XLLVII ஆம் அத்தியாயம்)

(II) நிதிப் பிரமாணங்கள் :

   (i) கணக்கீட்டு உத்தியோகத்தர் (III ஆம் அத்தியாயம்)
   (ii) அரச நிதி கிடைத்தல் (XI ஆம் அத்தியாயம்)
   (iii) அரசின் நிதி போன்றவற்றில் பாதுகாப்பு (VII ஆம் அத்தியாயம்)
   (iv) அரச திணைக்களங்களில் பிரதான காசேடு, பதிவுகள் (VII ஆம் அத்தியாயம் II ஆம் பகுதி)
   (v) கேள்விப்பத்திர முறை

6-920

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கல்வி அமைச்சு**

இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆம் தர உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடை தாண்டற் பரீட்சை - 2009

இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆம் தர உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை 2009, நவெம்பர் மாதம் கொழும்பில் நடைபெறும். சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலம் பரீட்சை நடைபெறுவதுடன் விண்ணப்பிக்கும் மொழிமூலத்தைப் பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது.

2. இப்பரீட்சைக்கு உரிய பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் 1999, மாச்சு 11 ஆந் திகதிய 1070/13 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. வசதிக்காக அப்பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

உத்தியோகத்தர் ஒருவருக்கு வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்குரிய பாடங்களை ஒரே தடவையில் அல்லது தனித்தனியான சந்தர்ப்பங்களில் தோற்ற முடியும்.

**பாடவிதானம் :**

| விடய இல. | பாடம் | புள்ளி | காலம் |
|---|---|---|---|
| (01) | **பொது முகாமைத்துவம் மற்றும் தாபன செயற்பாடுகள் :** அரச தாபனக்கோவையின் i, ii, iii, iv, v, vii, viii, ix, xii, xiii, xiv, xxiv, xxviii, xxx மற்றும் xxxi ஆகிய வாசகங்களுக்கு விசேட கவனத்துடன் தாபன விதிக்கோவையின் சட்டம் | 100 | 1 1/2 மணித்தியாலம் |

| விடய இல. | பாடம் | புள்ளி | காலம் |
|---|---|---|---|
| (02) | **நிதி ஒழுங்குவிதிகள் :** அரச நிதி ஒழுங்குவிதிகளின் முதலாவது பிரிவின் i, ii,v, viii, xii மற்றும் xiv வாசகங்களுக்கு விசேட கவனத்துடன் | 100 | 1 1/2 மணித்தியாலம் |
| (03) | **கல்விச் சட்டம் :** பரீட்சார்த்திகளிடம் கீழ்க்குறிப்பிடப்பட்ட கட்டளைச் சட்டங்கள் மற்றும் பாராளுமன்றச் சட்டம் தொடர்பான விளக்கம் எதிர்பார்க்கப்படுகின்றது- | 100 | 2 மணித்தியாலம் |

(i) 1939 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க கல்விக் கட்டளைச் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட சட்டக் கோவைகள்.
(ii) 1960 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலை மற்றும் ஆசிரியர் கல்லூரி (விசேட ஒழுங்குவிதிகள்) சட்டம்.
(iii) 1961 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலை மற்றும் ஆசிரியர் கல்லூரி (குறைநிரப்பு ஒழுங்குவிதிகள்) சட்டம்.
(iv) 1976 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பகிரங்கப் பரீட்சை (மறுசீரமைப்பு) சட்டத்தினால் மறுசீரமைக்கப்பட்ட 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பகிரங்க பரீட்சைச் சட்டம்.
(v) 1981 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலை (விசேட ஒழுங்குவிதிகள்) சட்டம்.
(vi) 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய கல்வித்தாபனச் சட்டம்.
(vii) 1986 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க கல்விக் கல்லூரிச் சட்டம்.
(viii) 1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கல்வி ஆணைக்குழுச் சபைச் சட்டம்.
(ix) 1997 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க தேசிய ஆசிரிய கல்வி அதிகாரசபைச் சட்டம்.
(x) 13 ஆவது மறுசீரமைப்பு மற்றும் அடிப்படை உரிமை தொடர்பான 3 ஆவது வாசகத்துக்கு விசேட கவனத்துடன் இலங்கை அரசியல் யாப்பு.
(xi) கல்விக்குரியதான மாகாண சபையினால் விதிக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.

**குறிப்பு**.- பரீட்சார்த்தியினால் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் 40% புள்ளிகளைப் பெறவேண்டும்.

3. **பரீட்சையின் மொழிமூலம்**.- (i) பரீட்சார்த்திகளுக்கு அரசமொழி அல்லது தேசிய மொழி ஆகியவற்றில் ஏதாவதொன்றில் விடையளிக்க முடியும்.

(ii) பரீட்சார்த்தி அரச சேவைக்கு இணைந்துகொள்வதற்கு முன்னர் தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழிமூலம் அல்லது போட்டிப் பரீட்சையின்றி அரசசேவைக்கு இணைந்துகொண்டோர் தொடர்பாக அரச சேவைக்கு இணைந்துகொள்ள தகைமைபெற்ற பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலத்தில் விடையளிக்க முடியும்.

4. பரீட்சார்த்தி தமக்கு உரிமையற்ற மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்றுவதாகத் தெரியவருமிடத்து அவர் பரீட்சார்த்தி நிலையிலிருந்து நீக்கப்படுவார்.

5. விண்ணப்பப்படிவம் கீழ்க்குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் சகல தலைப்புக்களும் முதலாம் பக்கத்தில் அமையக்கூடியவாறு தயாரிக்கப்பட வேண்டியதுடன் அதற்குரிய தகவல்களை தமது கையெழுத்தினால் தெளிவாக எழுதவேண்டும். விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்களும் முழுமையாகப் பூர்த்திசெய்யப்படாத தகவல்களைக் கொண்ட விண்ணப்பப்படிவங்களும் முன்னறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாக இருப்பதுடன் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவானதா என்பது குறித்து விண்ணப்பதாரியினால் வினவ வேண்டியதுடன் அவ்வாறு இல்லாதபட்சத்தில் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரைச் சிங்களமொழி மூல விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடவேண்டும்.

6. இப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சையை நடாத்துவதற்காக அவரினால் விதிக்கப்பட்டுள்ள சட்டங்களைப் பின்பற்ற பரீட்சார்த்தி கட்டுப்பட வேண்டும்.

7. விண்ணப்பப்படிவம் 2009.08.28 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். அன்றைய தினத்திற்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2-II வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை" எனக் குறிப்பிட்டு அனுப்பவேண்டும்.

8. விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 நாட்கள் அல்லது 3 நாட்கள் கடந்ததன் பின்னர் அனுமதி அட்டை கிடைக்காதபட்சத்தில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க

வேண்டும். தாங்கள் வைத்துக்கொண்டுள்ள விண்ணப்பப்படிவம் மற்றும் நிதி செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு உறுதிசெய்யப்பட்ட போட்டோப் பிரதி, பதிவுசெய்த பற்றுச்சீட்டு, கொழும்புக்கு வெளிப்பிரதேசமாயின் அனுமதி அட்டையை அனுப்புவதற்காக பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு தங்களது கோரிக்கைக் கடிதத்தையும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு வழங்குவது மிகவும் பயன்மிக்கதாக அமையும்.

9. மேற்கூறப்பட்ட 8 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்திசெய்யத் தவறும் பரீட்சார்த்திகளினால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

10. விண்ணப்பதாரர் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய விண்ணப்பப்படிவத்தை பரீட்சைத் தினத்தன்று மண்டபத்தில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்.

11. பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளங்களை உறுதிசெய்வதற்காக சான்றுகளைச் சமர்ப்பிப்பது பரீட்சார்த்தியின் பொறுப்பாக இருப்பதுடன் அதற்காக கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆவணங்களில் எதனையும் சமர்ப்பிக்க முடியும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை,

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

12. விண்ணப்பதாரர் ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டையொன்றை வழங்குவதன் மூலம் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குப் பூரண தகைமைகளைக் கொண்டுள்ளார் எனக் கருதப்பட முடியாது.

13. இப்பரீட்சைக்குத் தோற்ற பரீட்சார்த்திகளிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அடிப்படையில் பரீட்சைக் கட்டணத்தை அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது :-

(அ) முதற் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றுபவர்களிடமிருந்து முழுமையான பரீட்சைக் கட்டணம் அல்லது பகுதிக்காக கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

| | | ரூபா |
|---|---|---|
| (ஆ) மொத்தப் பரீட்சைக் கட்டணம் | - | 150 |
| ஒரு பாடத்திற்கு | - | 50 |

பரீட்சார்த்திகளினால் கையொப்பமிட்டு ஒழுங்கான முறையில் இரத்துச்செய்து வருமான முத்திரை மூலம் கட்டணம் செலுத்த வேண்டும்.

எம். எம். என். டி. பண்டார,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பத்தரமுல்லை,
2009.07.09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி அமைச்சு**

இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆந் தர வினைத்திறன் தடை தாண்டற் பரீட்சை – 2009
(Efficiency Bar Examination in Class 2 Grade II of Sri Lanka Teacher Educators' Service – 2009)

விண்ணப்பப்படிவம் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற விலாசத்திற்கு நிறுவனத் தலைவரூடாக பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். ('பரீட்சையின் பெயர்' கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும்.)

உத்தியோகத்தர் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் : சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 [ ]

(உரிய குறியீட்டு இலக்கத்தைக் குறிப்பிடவும்)

1. (அ) முதலெழுத்தை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :-----.
உ-ம் : Mr./Mrs./Miss SILVA, A.B.

(ஆ) முதலெழுத்துக்களினால் குறித்துக்காட்டப்படும் பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :-----.

2. பிறந்த திகதி :-

ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

3. (i) பதவிப் பெயர் :-----.
(ii) சேவையாற்றும் கல்விக் கல்லூரி/ஆசிரிய பயிற்சிக் கல்லூரி/ஆசிரிய மத்திய நிலைய முகவரி :-----.
(அனுமதி அட்டை இம்முகவரிக்கு அனுப்பப்படும்)

4. சொந்த முகவரி (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :-----.

5. அறிவித்தலின் 3 ஆம் வாசகம் (அ) இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாட இலக்கம் மற்றும் பாடத்துடன் எடுக்கும் பாடங்களைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும் :-

| பாட இலக்கம் | பாடத்தின் பெயர் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |

6. இதற்கு முன்னர் இப்பரீட்சைக்கு முழுமையாக அல்லது அதில் ஒரு பகுதிக்கு தோற்றியுள்ளாரா ? அவ்வாறாயின் பாடம் மற்றும் தோற்றியஆண்டு, மொழியைக் குறிப்பிடவும் :-

| பாடங்கள் | ஆண்டு | மொழி | பரீட்சைச் சுட்டெண் |
|---|---|---|---|
| ................................<br>................................ | ................................<br>................................ | ............................<br>............................ | ............................<br>............................ |

7. செலுத்திய பரீட்சைக் கட்டணம் :-----.

| முத்திரை ஒட்டவும் |
|---|

(உரிய கட்டணத்திற்கான முத்திரையை ஒட்டி அதன் மேல் விண்ணப்பதாரியினால் கையொப்பமிட்டு இரத்துச்செய்ய வேண்டும்)

8. மேற்கூறப்பட்ட விபரங்கள் உண்மையானதென்றும், வர்த்தமானி அறிவித்தலில் 3 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற எனக்கு உரிமை இருப்பதாகவும் உறுதி செய்கிறேன். பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளரினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கும் கட்டுப்பட இணங்குகிறேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
பரீட்சைத் திணைக்களம்.

(1) இவ்விபரம் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்ற தகுதிபெற்றவர் என்றும் வர்த்தமானி அறிவித்தலின் 3 ஆவது வாசகத்திற்கமைய அவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற தகுதி உடையவர் என்றும் உறுதி செய்கிறேன்.

(2) பரீட்சார்த்தி முத்திரையை உரியவாறு செல்லுபடியற்றதாக்கியுள்ளதாக உறுதிசெய்கிறேன்.

.......................................................
பீடாதிபதி/ஆசிரிய மத்திய நிலையப்
பொறுப்பாளரின் கையொப்பம்,
மற்றும் பதவிப் பெயர்.

திகதி :-----.

7-802

## தொழில் திணைக்களம்

*தொழில் திணைக்களத்திற்கு தமிழ்மொழிமூல தொழில் அலுவலர்களை ஆட்சேர்த்தலுக்கான விசேட திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2008*

*தொழில் திணைக்களத்திற்கு தமிழ்மொழிமூல தொழில் அலுவலர்களை ஆட்சேர்ப்பதற்குப் போட்டிப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் தமிழ்மொழிமூலம் மட்டும் 2009, நவெம்பர் மாதம் கொழும்பில் நடத்தப்படும்.*

*2.* ***பதவிக்குரிய சம்பளத்திட்டம்.****- அரசாங்க நிர்வாக சுற்றுநிருபம் 06/2006 (iv) படி தொழில் அலுவலர் சேவையின் II ஆவது மற்றும் I ஆவது வகுப்புக்காக 2007.06.01 ஆந் திகதி முதல் உரிய சம்பளத்திட்டம்.- எம்என் 05-2006ஏ ரூபா 16,720-10x320-11x365-15x450-30,685 (மாதாந்தம்)*

*அரசாங்க நிர்வாக சுற்றுநிருபம் (அ. நி. சு. 20/ 2001 இன்படி நியமனத்திலிருந்து 3 வருடங்களுக்குள்ளாகவோ அல்லது 4 ஆவது சம்பள உயர்வுக்குமுன் I ஆவது வினைத்திறமைகாண் தடையிலும், நியமனத் திகதியிலிருந்து 6 வருடங்களுக்குள்ளோ 7 ஆவது சம்பள அளவுத்திட்டத்தை அடையுமுன்போ II ஆவது வினைத்திறமைகாண் தடையிலும் சித்தியடைய வேண்டும்.)*

***குறிப்பு****.- ஆட்சேர்ப்பு II ஆம் தரத்திற்கு இடம்பெறும் முதலாவது, இரண்டாவது வினைத்திறமைகாண் தடையில் சித்தியடைந்து மொழித் தகைமை (சிங்களம்) நேர்முகப் பரீட்சையைப் பூர்த்திசெய்த, சேவையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள இரண்டாம் தரத்தில் 10 வருடங்கள் திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்திசெய்துள்ள, பதவி உயர்வு பெறும் தினத்திற்கு முன்னரான 5 வருடங்களில் உரிய சம்பள உயர்வைப் பெற்றுக்கொண்டு, ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படாது இருப்பின் 1 ஆம் தரத்திற்கு உயர்த்தப்படுவர்.*

*3.* ***கல்வி மற்றும் தகைமைகள்****.- பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள்-*

(i) *சிறந்த ஒழுக்கமும் நல்ல தேகாரோக்கியமும் இருத்தல் வேண்டும் ;*

(ii) இலங்கைப் பிரசையாயிருத்தல் வேண்டும் ;

(iii) இப்பரீட்சை தமிழ் மொழி மூலமாக மட்டுமே நடத்தப்படுவதுடன் விண்ணப்பதாரிகளின் இனமோ, சாதியோ கவனிக்கப்பட மாட்டாது.

(iv) *திறந்த பரீட்சைக்கான தகைமைகள் :*

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரியாகவோ,
(ஆ) சட்டத்தரணியாகப் பணியாற்றுவதற்கு உரித்துடைய தொழில் தகைமையோ, விண்ணப்பம் கோரும் இறுதித் தினத்தில் பெற்றிருத்தல் வேண்டும்.

(v) *மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கான தகைமைகள் :*

(அ) அரச சேவையிலோ மாகாண அரச சேவையிலோ எழுதுவினைஞர் அதற்குச் சமமான தரத்திலோ அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையிலோ நிரந்தர, ஓய்வூதியத்திற்குரித்தான 10 ஆண்டுகள் சேவைக்காலத்தை விண்ணப்ப முடிவுத் திகதியன்றோ அதற்கு முன்னரோ பூர்த்திசெய்துள்ள சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள அலுவலராதல்

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றுள்ள அரச சேவையிலோ, மாகாண அரச சேவையிலோ எழுதுவினைஞர் அதற்குச் சமமான தரத்திலோ அல்லது அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையிலோ நிரந்தர ஓய்வூதியத்திற்குரித்தாக 5 ஆண்டுகள் சேவைக்காலம் விண்ணப்பம் கோரும் இறுதி நாளிலோ அதற்கு முற்படவோ பூர்த்திசெய்துள்ள சேவையில் நிரந்தரமாகியுள்ள அலுவலராக இருப்பது.

**குறிப்பு**.- (i) 2009.08.31 ஆந் திகதிக்கு முற்பட்ட 5 ஆண்டுக்குள் திருப்திகரமான சேவைச் சான்றிதழ் இல்லாவிடின் பரீட்சைக்குத் தோற்றினாலும் நியமனம் தொடர்பில் கவனம் செலுத்தப்படமாட்டாது.

விண்ணப்பதாரி-

(அ) தகைமைகளைப் பூர்த்திசெய்யவேண்டிய தினத்திற்கு முற்பட்ட 5 வருடங்களுக்குள் சகல சம்பள ஏற்றங்களையும் உரிய தினத்தில் பெற்றுக்கொண்டிருப்பினும்,

(ஆ) இக்கால கட்டத்தில் இழைத்த குற்றத்திற்கு (எச்சரிக்கை செய்யப்பட்டமை அன்றி) எந்தவொரு தண்டனையையும் பெற்றிராவிட்டால் அவருக்கு திருப்திகரமான சேவை இருந்ததாகக் கணிக்கப்படும்.

(ii) மேலே (v) (அ), (ஆ) இல் காட்டப்பட்டுள்ள தகைமை பெற்றுள்ள மட்டுப்படுத்தப்பட்ட பிரிவுக்கான தகைமைகள் பெற்றுள்ள சேவைகள், தரங்கள் உப அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ளது.

(vi) விண்ணப்பம் கோரும் இறுதிநாளில் விண்ணப்பதாரிகளின் வயது 18 ஆண்டுகளுக்கு குறையாதிருப்பதுடன், 45 வயதிற்கு மேற்படாமலுமிருக்க வேண்டும். (ஏற்கனவே அரச சேவையிலோ மாகாண அரச சேவையிலோ உள்ளவர்களுக்கு வயது மேலெல்லை பொருந்தாது.)

(vii) மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்குத் தோற்றத் தகைமையுள்ளவர்களுக்கு திறந்த பரீட்சைக்குத் தோற்றவும் தகைமை பெற்றிருப்பின் அவ்விபரங்களைச் சரியாகக் குறிப்பிட்டு ஒரு விண்ணப்பப்படிவத்தினூடாக பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

**4. ஆட்சேர்ப்புத் திட்டம் :**

(அ) அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவிகள் 20 இல் 10 இன்படி மேலே 3 ஆம் பந்தியின் (iv) ஆவது (v) ஆவது உப பிரிவுகளில் காட்டப்பட்டுள்ள தகைமைகள் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின்படி தொழில் ஆணையாளர் நாயகத்தால் தகைமைகள் மற்றும் சான்றிதழ்கள் பரீட்சிப்பதற்காக நடத்தப்படும் நேர்முகப் பரீட்சையின்படி வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

(ஆ) போட்டிப் பரீட்சையில் உரிய வினாத்தாள்களுக்காக 40 புள்ளிகளோ அதற்கு மேற்பட்டதாகவோ பெறும் பரீட்சார்த்திகளின் தகைமைப்பட்டியல் தயாரிக்கப்படும்.

**5. சேவை நிபந்தனைகள் :**

(அ) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்குரித்தானது. விதவைகள் அனாதைகள்/தபுதாரர் ஓய்வூதிய நிதிக்கு உதவுதொகை செலுத்த வேண்டும். நியமனம் 3 ஆண்டுகால தகுதிகாண் காலத்திற்குட்பட்டது. தற்போது நிரந்தர அரச சேவையிலுள்ள ஒருவர் தெரிவாகுமிடத்து அவர் ஒரு வருட காலத்திற்கு பதிற் கடமையாற்றுகையின்கீழ் நியமிக்கப்படுவார்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் நியமனத் திகதி முதல் குறைந்தது 10 ஆண்டுகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தொழில் அலுவலகங்களிலும் பின்வரும் தொழில் அலுவலகங்களிலும் மட்டும் பணியாற்றுவதற்குக் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும். இவற்றிற்கு வெளியிலான அலுவலகங்களுக்கு இடமாற்றம் செய்யப்படமாட்டாது :-

நுவரெலியா, அட்டன், பதுளை, அப்புத்தளை, கம்பளை, நாவலப்பிட்டி, கண்டி வடக்கு, கண்டி தெற்கு, மத்துகம, மாத்தளை, கேகாலை, அவிசாவளை, இரத்தினபுரி மற்றும் பெல்மதுளை.

(இ) தகுதிகாண் காலத்தில் அலுவலர்கள் பின்வரும் 1 ஆம் வினைத்திறமைகாண் தடை பரீட்சையில் சித்தியடைய வேண்டும் :-

(i) தொழில் சட்டங்கள் I ஆம், II ஆம் பரீட்சை
(ii) தாபனக்கோவை (I ஆம், II ஆம் பகுதிகள்) நிதிப்பிரமாணங்களும் அலுவலக நடைமுறைகளும் பரீட்சை
(iii) சிங்கள வாய்மொழிப் பரீட்சை (இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளரால் நடத்தப்படும்.)

(ஈ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் அரசாங்க நிர்வாக சுற்றுநிருபம் இல. 07/2007 மற்றும் 07/2007 (1) இன்படி சிங்கள மொழி தொடர்பிலான தகைமையைச் சேவையில் இணைந்து 05 ஆண்டுகளுக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும். நியமனம் பெற்று 5 ஆண்டுகளுக்குள் உரிய தகைமையைப் பெற்றுக்கொள்ளாதவிடத்து தகைமை பெறும்வரை சம்பள ஏற்றம் இடைநிறுத்தப்படும்.

(உ) வேறு சேவை நிபந்தனைகள் தொடர்பில் இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) இன் ஆரம்பத்தில் வெளியாகியிருக்கும் அரசசேவைப் பதவிகளுக்கான நியமனங்கள் தொடர்பான பொது நிபந்தனைகள் ஏற்புடையதாகும்.

**6. பரீட்சைத் திட்டம்.**- திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட ஆகிய இரண்டிற்குமான போட்டிப் பரீட்சை :

நுண்ணறிவு வினாத்தாள் - (காலம் : 1 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்

பரீட்சார்த்தியின் மொழி, கணித அறிவையும், தர்க்கிக்கும் சக்தியையும் தீர்மானமெடுக்கும் தகைமையையும் பரீட்சிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட வினாத்தாளாகும். அதில் பொருள் விளங்கும் மாதிரியான (Objective Type) வினாக்கள் 50 இடம்பெறும்.

**7. விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்தல்.**- (i) விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இல. 01 முதல் 04 வரை முதலாம் பக்கத்திலும் 05 முதல் 10 வரை இரண்டாம் பக்கத்திலும் ஏனையவை 3, 4 ஆம் பக்கங்களிலும் இடம்பெறத்தக்கதாகத் தயாரித்து அவற்றிற்குரிய விபரங்களை தமது கையெழுத்தில் தெளிவாக உள்ளடக்க வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாத விண்ணப்பப்படிவங்களும், விபரங்களைக் குறைபாடுகளுடன் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பப்படிவங்களும் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படுவதுடன், விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியொன்றை உடன் வைத்துக்கொள்வது பயனுள்ளதாகும்.

மேலும், பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என்பதை விண்ணப்பதாரி சரிபார்த்துக்கொள்ள வேண்டியதுடன் அவ்வாறில்லாவிட்டால் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்படும் பரீட்சையின் பெயர், தமிழ் மொழியிலான விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுத வேண்டும்.

(ii) விண்ணப்பங்கள் 2009.08.31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவு அஞ்சலில் அனுப்பப்பட வேண்டும். அத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அஞ்சலில் காணாமற்போகும் அல்லது தாமதமாகும் விண்ணப்பங்கள் தொடர்பில் அத்திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது. அத்துடன் தமிழ்மொழிமூலமன்றி வேறு மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

(iii) விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தமிழ்மொழி மூல தொழில் அலுவலர்களை ஆட்சேர்க்கும் போட்டிப் பரீட்சை – 2008" என்று குறிப்பிட்டு அனுப்பவேண்டும்.

(iv) பரீட்சைக் கட்டணம் ரூபா 300 ஆகும். இப்பணம் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்திற்கு முன் எந்தவொரு மாவட்ட செயலாளர் அலுவலகத்திலோ, எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலோ வருமானத் தலைப்பு 4000-20-03-20-13 க்கு வரவு வைப்பதற்காகச் செலுத்தப்பட வேண்டும். மாவட்ட செயலாளர் அலுவலகத்தாலோ பிரதேச செயலாளர் அலுவலகத்தாலோ பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய பகுதியில் ஒட்ட வேண்டும். பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் நிழற்பிரதியையும், விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதியையும் வைத்துக்கொள்வது பயனுள்ளதாகும்.

(v) பரீட்சை செல்லுபடியற்றதாக்கப்பட்டாலன்றி வேறு எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது. மேலும் இப்பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட கட்டணம் வேறு பரீட்சைக்கு மாற்றம் செய்ய முடியாது.

(vi) ஏற்கனவே அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் திணைக்களத் தலைவரூடாகத் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் இறுதியிலுள்ள திணைக்களத் தலைவரின் சான்றிதழ் கட்டாயமாகப் பூர்த்திசெய்யப்படல் வேண்டும்.

(vii) விண்ணப்பதாரிகளால் வர்த்தமானியிலுள்ள அறிவித்தல்கள் கவனமாக வாசித்து பூர்த்திசெய்யப்பட வேண்டும். குறைபாடுடைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதைக் கவனிக்கவும்.

(viii) விண்ணப்பப்படிவங்களை எந்தவொரு தனிப்பட்ட முகவரிக்கும் அனுப்பக்கூடாது. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடனேயே அதைக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்பும் அனுமதி அட்டை கிடைக்காவிட்டால் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அதுபற்றி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்குத் தெரிவிக்க வேண்டும். தங்களிடம் வைத்துள்ள விண்ணப்பப்படிவத்தையும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்திய நிழற்பிரதியையும், பதிவு அஞ்சலிடப்பட்ட பற்றுச்சீட்டையும் கொழும்பிற்கு வெளியேயான பிரதேசங்களெனின் அனுமதி அட்டை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு தங்கள் விண்ணப்பக் கடிதத்தின் பிரதியை வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிப்பது பயனுள்ளதாகும்.

(ix) விண்ணப்பதாரியின் கையொப்பம் பின்வருமொருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, அரச மற்றும் அரச உதவி பெறும் பாடசாலையின் அதிபர், முப்படைகளின் கட்டளையிடும் அதிகாரி, காவற்றுறை சேவையில் வர்த்தமானியில் குறிக்கப்படும் பதவிக்குரிய அலுவலர், நிர்வாக தரத்தில் பதவி வகிக்கும் அலுவலர், பௌத்த விகாராதிபதி, வேறு சமயத் தலைவர் அல்லது பொறுப்பான பதவி வகிக்கும் வேறெந்த சமயத் தலைவர்.

(x) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பதாரிகளுக்கேற்படும் பயணச்செலவோ, வேறெந்த கொடுப்பனவோ வழங்கப்பட மாட்டாது.

8. **பரீட்சைக்கு உள்வாங்கல்.**- (i) விண்ணப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் அனுமதி அட்டையும், நேர அட்டவணையும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் அவ்வனுமதி அட்டையை தமது கையொப்பத்தை உறுதிப்படுத்தி பரீட்சை தொடங்கும் நாளில் பரீட்சை மண்டபத்தில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வனுமதி அட்டையைத் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்தி பரீட்சை தொடங்கும் நாளில் சமர்ப்பிக்கத் தவறும் எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் இப்பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்பட மாட்டாது.

(ii) விண்ணப்பதாரிகள் தமக்குரிய பரீட்சை நிலையத்தில் மட்டுமே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். தமக்குரிய பரீட்சை நிலையம் தவிர்ந்த வேறு பரீட்சை நிலையத்தில் தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(iii) இப்பரீட்சைக்குத் தோற்ற அனுமதிப்பது தகைமையை ஏற்றுக்கொண்டதாகக் கருதப்பட மாட்டாது. பரீட்சையின்போது பரீட்சார்த்தியால் கைக்கொள்ள வேண்டிய சட்டவிதிகள் இவ்வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது. சகல பரீட்சார்த்திகளும் அவ்விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும். பரீட்சை நடத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்குப் பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவர்கள். அந்த விதிமுறைகள் மீறப்படின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு அவர்கள் உள்ளாக வேண்டியேற்படும்.

9. **பரீட்சார்த்திகளை அடையாளங்காணல்.**- பரீட்சை தினத்தன்று சகல விண்ணப்பதாரிகளாலும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியடையக்கூடியதாக தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை ;
(ஆ) இப்பரீட்சை நடைபெறும் தினத்தில் செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

குறிப்பிட்ட அடையாள அட்டைகளைச் சமர்ப்பிக்காத பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளை வெளியிடுவதற்கான அதிகாரம் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்குரியது.

**குறிப்பு**.- மேற்குறிப்பிட்ட ஆவணங்களிலொன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது தாமதிக்கும் எந்தவொரு விண்ணப்பதாரியும் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டாது. அதனால் நேரகாலத்துடன் உரிய ஆவணங்களைத் தயாரித்துக்கொள்ளுமாறு விண்ணப்பதாரிகளுக்குத் தெரியப்படுத்தப்படுகின்றது.

10. **தகைமைகள் தொடர்பான ஆவணங்கள்**.- (i) கேட்கப்பட்டுள்ள சகல விபரங்களும் விண்ணப்பதாரிகளால் தமது விண்ணப்பப்படிவத்தில் காட்டப்பட வேண்டும். இவ்வறிவித்தலுக்கு புறம்பான விண்ணப்பங்களிருப்பின் அவை நிராகரிக்கப்படும்.

(ii) இறுதியாக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்காகத் தமது தகைமைகளை ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும். அல்லது என்னால் கேட்டுக்கொள்ளப்படும்போத அவ்வாவணங்களைத் தாமதமின்றிப் பதிவு அஞ்சலில் எனக்கு அனுப்ப வேண்டும்.

(iii) பின்வரும் ஆவணங்கள் தேவைப்படும் :-

(அ) சிறந்த ஒழுக்கமுள்ளவரென பொறுப்புள்ள இருவரால் வழங்கப்பட்ட நற்சான்றிதழ்கள் இரண்டு. (ஏற்கனவே அரச சேவையில் உள்ளவர்களுக்கு இச்சான்றிதழ் அவசியமில்லை.)

(ஆ) விண்ணப்பதாரியின் பிறப்பைப் பதிவுசெய்த சான்றிதழின் பிரதி

**கவனத்திற்குரியது** :

(i) பாடசாலைப் பாவனைக்கோ, கல்வித் தேவைகளுக்கோ வழங்கப்பட்ட விசேட பிறப்புச் சான்றிதழோ பிறப்புச் சான்றிதழைப் பதிவுசெய்யும் குறிப்புகளை உறுதிப்படுத்திய ஆவணங்களோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ii) சத்தியக்கடதாசியோ, ஞானஸ்ஞான சான்றிதழோ பிறப்புச் சான்றிதழுக்காக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(இ) இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்யப்பட்ட சான்றிதழோ பரம்பரையாக உரித்துடைய பிரசைக்கான உரிமையுள்ளதெனவோ அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதைக் காட்டும் சான்றிதழ் (தேவையின்படி)

(ஈ) கல்வித் தகைமைகள் பற்றிய மூலச்சான்றிதழ்கள்

(உ) அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது சேவைக்காலம் தொடர்பாகப் பெற்றுக்கொண்ட சான்றிதழ் (விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட சான்றிதழுக்கு மேலதிகமாக)

(ஊ) அடையாள அட்டை

(iv) விண்ணப்பப்படிவத்துடன் மேற்குறிப்பிட்ட எந்தவொரு சான்றிதழையும் இணைத்தனுப்பாதிருப்பதுடன், அச்சான்றிதழ்கள் சகலவற்றையும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கும்போது சமர்ப்பிக்க வேண்டும்.

(v) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது தேவையான சகல ஆவணங்களையும் தயார்படுத்திக்கொள்ளுமாறு சகல விண்ணப்பதாரிகளுக்கும் தெரியப்படுத்தப்படுகின்றது. நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படும்போது அல்லது என்னால் கேட்டுக்கொள்ளப்படும்போது அவ்வாவணங்களைச் சமர்ப்பிப்பதற்கு முடியாது அல்லது தாமதிக்கும் விண்ணப்பதாரிகள் இருப்பின் அவர்களது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11. **தவறான விபரங்களை வழங்குவதற்கான தண்டனைகள்**.- இப்பரீட்சையின் கட்டளைக்கமைய எவரொரு விண்ணப்பதாரியும் தகைமையற்றவரெனக் காணப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சை நடைபெறும்போதோ அல்லது அதற்குப் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்ப தகைமை நிராகரிக்கப்படும்.

விண்ணப்பதாரியால் அவர் தெரிந்துகொண்டே தவறான விபரங்கள் வழங்கப்பட்டிருப்பதாகவோ, அவ்வாறின்றி அவர் பரீட்சைக்குத் தோற்றத் தகைமையற்றவராகவோ அவரது சேவைக்காலத்தில் ஒப்பிக்கப்படுமிடத்து அவர் சேவையிலிருந்து நீக்கப்பட வழியேற்படும்.

**குறிப்பு**.- இவ்வர்த்தமானி அறிவித்தல் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வழங்கப்பட்டிருப்பதுடன் அவற்றில் ஏதாவது வேறுபாடுகள் இருப்பின் சிங்கள மொழியில் வெளியாகியுள்ள அறிவித்தலே சரியானதாகக் கொள்ளப்படும் என்பதைத் தயவுசெய்து கவனிக்கவும்.

மஹிந்த மடிஹஹேவா,
செயலாளர்.

தொழில் உறவுகள், மனிதவலு அமைச்சு,
2009.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக பாவனைக்கு மட்டும்)

**தொழில் திணைக்களத்திற்கு தமிழ் மொழிமூல தொழில் அலுவலர்களை ஆட்சேர்ப்பதற்கான விசேட திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2008**

Special Open/Limited Competitive Examination For Recruitment of Tamil Medium Labour Officers to the Labour Department – 2008

வர்த்தமானி அறிவித்தலின்படி தாங்கள் தோற்றுவது மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கா ?/திறந்த பரீட்சைக்கா என்பதைக் குறிப்பிடவும் :-

மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை - 1
திறந்த பரீட்சை - 2
மட்டுப்படுத்தப்பட்ட/திறந்த பரீட்சை இரண்டிற்கும் - 3
(தகைமை இருந்தால் மட்டும்)

(உரிய இலக்கத்தை அடைப்பில் எழுதவும்)
(பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது)

1. 1.1 விண்ணப்பதாரியின் முதலெழுத்தை இறுதியில் எழுதி முதலெழுத்துடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :———.
உ-ம் : SILVA, A.B.

1.2 முழுப்பெயர் (ஆங்கில எழுத்துக்களில்) :———.

1.3 முழுப்பெயர் (தமிழில்) :———.

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :———.
(இம்முகவரிக்கு பரீட்சை அனுமதி அட்டை அனுப்பப்படும்)

2.2 உரிய மாவட்டம் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :———.

2.3 நிரந்தர முகவரி (தமிழில்) :———.

2.4 அலுவலக முகவரி (தேவைப்படின் மட்டும்) (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :———.

3. 3.1 தேசிய அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | |

4. 4.1 பால் : ஆண்-0, பெண்-1

(உரிய இலக்கத்தை அடைப்பில் குறிப்பிடவும்)

4.2 இனம் :

சிங்களவர் - 1
இலங்கைத் தமிழர் - 2
இந்தியத் தமிழர் - 3
முஸ்லிம் - 4
மலாயர் - 5
ஏனையோர் - 6

(உரிய இலக்கத்தை அடைப்பில் குறிப்பிடவும்)

4.3 வர்த்தமானி அறிவித்தலின்படி நீங்கள் தோற்றுவது மட்டுப்படுத்தப்பட்ட பிரிவுக்கா/திறந்த பிரிவுக்கா ? என்பதைக் குறிப்பிடவும் :

மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை - 0
திறந்த பரீட்சை - 1

(உரிய இலக்கத்தை அடைப்பில் குறிப்பிடவும்)
(பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது)

5. 5.1 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதங்கள் ☐☐ திகதி ☐☐

5.2 2009.08.31 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

5.3 2009.08.31 ஆந் திகதியில் பரீட்சைக்குத் தோற்ற தகைமைபெற்ற முழுச்சேவைக்காலம் :———.
(மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகளுக்கு மட்டும்)

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

5.4 தாங்கள் இலங்கைப் பிரஜையாவது-

பரம்பரையாக - 1
பதிவின் மூலம் - 2

(உரிய இலக்கத்தை அடைப்பில் குறிப்பிடவும்)

6. ஏற்கனவே அரச சேவையில் பணிபுரியின் தாங்கள் வகிக்கும் பதவி :———.

7. பரீட்சைக்குத் தோற்றுவது வர்த்தமானி அறிவித்தலின் 3 ஆம் பந்தியின் (iv) மற்றும் (v) பிரிவுகளில் எப்பிரிவின்கீழ் என்பது பற்றி : ———.

8. கல்வித்தகைமைகள் (துங்களுக்கு உரியதாயின் மட்டும்) :

(1) பெற்றுக்கொண்டுள்ள பட்டம் :———.
(2) பட்டம்பெற்ற வருடமும் பல்கலைக்கழகமும் :———.
(3) சட்டத்தரணியாகப் பணியாற்றுவதற்குத் தகைமைபெற்ற ஆண்டு :———.

9. சேவை விபரம் (உரிய விண்ணப்பதாரிகளுக்காக) :———.

| நிறுவனம் | பதவிப்பெயர் | காலம் | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

10. தாங்கள் அரச சேவையிலிருக்கும் அலுவலரெனின் எச்சரிக்கை செய்யப்பட்டதன்றி வேறு தண்டனைகள் பெற்றிருந்தால் விபரம் : ———.

11. (அ) பரீட்சைக் கட்டணம் செலுத்திய மாவட்ட செயலக அலுவலகம்/பிரதேச செயலக அலுவலகம் :———.

(ஆ) பணம் செலுத்தப்பட்டதற்கான பற்றுச்சீட்டின் திகதியும் இலக்கமும் :———.
(பணம் செலுத்திய பற்றுச்சீட்டு கழராதபடி ஒரு முனையை மட்டும் ஒட்டவும்)

(பற்றுச்சீட்டு ஒட்டுவதற்காக)

12. **விண்ணப்பதாரியின் உறுதியுரை** :

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் எனக்குத் தெரிந்தவரை உண்மையானவையென்றும் சரியானவையென்றும் உறுதியுரைக்கின்றேன்.

(ஆ) இதில் குறிப்பிட்டுள்ள ஏதாவது விபரம் பொய்யானதென்றோ, தவறானதென்றோ நான் தெரிவுசெய்வதற்கு முன் தெரியவந்தால் இப்பதவிக்கு நான் தகுதியற்றதாக்குவதற்கு முடியும் என்பதையும், நான் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்ட பின் இதன் விபரங்கள் பொய்யானவையென்றோ, தவறானவையென்றோ தெரியவரின் எச்சந்தர்ப்பத்திலும் நான் சேவையிலிருந்து நீக்கப்பட முடியும் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும் பரீட்சை நடத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சகல விதிமுறைகளுக்கும் நான் கட்டுப்படுகின்றேன் என்பதை வெளிப்படுத்துகின்றேன்.

(ஈ) வர்த்தமானி அறிவித்தலின் 3 ஆவது பந்தியின்படி திறந்த பரீட்சைக்கு/மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்குத் தோற்ற நான் தகைமை பெற்றுள்ளேன் (தேவையற்ற சொற்களை வெட்டிவிடவும். இரண்டுக்கும் தகைமையிருந்தால் வெட்டவேண்டாம்.)

———,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :———.

13. (அ) விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிசெய்தல் :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................................................ ஐ நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும், அவர் எனது முன்னிலையில் .................................................. ஆம் திகதி தனது கையொப்பத்தை இட்டாரென்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

———,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் அலுவலரின் பெயர் :———.
பதவி :———.
முகவரி :———.

(ஆ) **திணைக்களத் தலைவரின் சான்றிதழ்** :

எனது இலக்கம் :..............................

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ................................................ பதவி வகிக்கும் அலுவலர் என்பதையும் அவர் ................................... ஆந் திகதியிலிருந்து இவ்வலுவலகத்தில் சேவையாற்றுகின்றார் என்பதையும், உரிய கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதென்றும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்பதையும் மேலே காட்டப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்பதையும் சான்றுபடுத்துகின்றேன்.

இப்பதவிக்காக அவர் தெரிவுசெய்யப்பட்டால் இந்த ................................................. சேவையிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/முடியாது என்பதையும் மேலும் தெரிவிக்கின்றேன்.

———,
திணைக்களத் தலைவர்.

திகதி :———.

**அட்டவணை 01**

**மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கு விண்ணப்பிக்கக்கூடிய சேவைகள்/தரங்கள்**

(அ) இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் நிர்வாகத்தின் கீழ்வரும் எந்தவொரு கீழே கூறப்படும் இணைந்த சேவையைச் சேர்ந்த அலுவலர், அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை அலுவலர், மொழி பெயர்ப்பாளர், நூலகர்.

(ஆ) பின்வரும் எந்தவொரு எழுதுவினைஞர் சேவையிலுமுள்ள அலுவலர் :

அஞ்சல், தொடரூந்து, பாராளுமன்றம், பாடசாலை, அரச அச்சகம், முன்னைய அரசாங்க வேலைத் திணைக்களம், சுகாதாரம், நிதி, ஊழியர் சேமலாப நிதி எழுதுவினைஞர்.

(இ) பின்வரும் எந்தவொரு திணைக்களத்திலுமுள்ள தரத்திலுள்ள அலுவலரோ அவ்வாறான தரத்தில் சேவையாற்றி பின்னர் மாகாண அரச சேவையில் ஒத்த தரத்தில் இணைக்கப்பட்டுள்ள அலுவலர்.

| திணைக்களம்/அமைச்சு | தரம் |
|---|---|
| சகல அமைச்சுக்கள் | மக்கள் தொடர்பு அலுவலர் |
| இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சு | மாவட்ட விளையாட்டு அலுவலர், விளையாட்டு அலுவலர் |
| நிதி, திட்டமிடல் அமைச்சு | புள்ளிவிபர மதிப்பீட்டு அலுவலர், புள்ளிவிபர உதவியாளர், திட்ட அலுவலர், வரவுசெலவு உதவியாளர், புள்ளிவிபர அளவையாளர், புள்ளிவிபர உதவியாளர் |
| கொள்கை, திட்டமிடல், அமுலாக்கல் அமைச்சு | புள்ளிவிபர மதிப்பீட்டு அலுவலர், புள்ளிவிபர உதவியாளர், பிரதேச அபிவிருத்தி அலுவலர், திட்ட செயற்படுத்தல் அலுவலர் |
| கல்வி | மாணவ விடுதி கண்காணிப்பாளர், திட்ட நிதி உதவியாளர் |
| கல்வி வெளியீடு | ஒப்புநோக்காளர் |
| குடிவரவு, குடியகல்வு | சிரேஷ்ட அதிகார அலுவலர், அதிகார அலுவலர் |
| ஆயுர்வேதம் | வைத்தியசாலை செயலாளர், விசாரணை அலுவலர் |
| உணவு | உணவுக் கட்டுப்பாட்டுப் பரீட்சகர் (முன்னர் உணவு, விலை கட்டுப்பாட்டு பரீட்சகர்), தடுப்பு அலுவலர் (சாமஸ்தானிய களஞ்சியம்), தானிய அளவையாளர், குத எழுதுவினைஞர், பட்டதாரி உதவி அலுவலர் (பெண்) |
| காணி ஆணையாளர் | களப் போதனாசிரியர் (முன்னைய காணி அபிவிருத்தி மேற்பார்வையாளர்), கச்சேரி நிலஅளவையாளர், குடியேற்ற அலுவலர், நிலமேற்பார்வையாளர், உதவிக் காணி திட்டமிடல் அலுவலர், திட்டமிடல் அலுவலர், செயற்றிட்ட மேற்பார்வையாளர், காணி அலுவலர் |
| விற்பனை அபிவிருத்தி | சந்தைப்படுத்தல் அலுவலர், முகாமையாளர், மதிப்பீட்டு அலுவலர், பிராந்திய சந்தைப்படுத்தல் அலுவலர் |
| அரச நிருவாக, உள்நாட்டலுவல்கள் | கிராம அலுவலர், அபிவிருத்தி இணைப்பாளர், விசாரணை உதவியாளர், அபிவிருத்தி அலுவலர், ஆய்வு உதவியாளர், மொழிபெயர்ப்பாளர் |
| தொழில் | மனிதவள மேம்பாட்டு அலுவலர், கள அலுவலர், மனிதவள மேம்பாட்டு உதவியாளர், நிதி உதவியாளர் |
| சிறிய மற்றும் கிராமிய கைத்தொழில் | கைத்தொழில் உதவியாளர், முகாமைத்துவ உதவியாளர், முகாமையாளர், பொருளாதார உதவியாளர், தொழில் உதவியாளர் |

| திணைக்களம்/அமைச்சு | தரம் |
|---|---|
| பொலிஸ் | பொலிஸ் சார்ஜன்ட் |
| தொல்பொருள் | தொல்பொருள் ஆய்வு அலுவலர் |
| ஏற்றுமதி, இறக்குமதி | வரவு, செலவு உதவியாளர் |
| கட்டடம் | முன்னேற்ற உதவியாளர் |
| கமநல சேவைகள் | கிராம அபிவிருத்தி அலுவலர், சிரேஷ்ட கிராம அபிவிருத்தி நிர்வாகி, சிரேஷ்ட கிராமிய அபிவிருத்தி உதவியாளர், கிராமிய அபிவிருத்தி உதவியாளர் |
| சனாதிபதி செயலகம் | புள்ளிவிபர ஆய்வாளர் |
| நீர்வழங்கல், வடிகாலமைப்பு | முன்னேற்ற உதவியாளர் |
| தேசிய நூதனசாலை | பாதுகாப்பு அதிகாரம்பெற்ற அலுவலர் |
| தேசிய வீடமைப்பு | பட்டதாரி உதவியாளர் |
| தொடரூந்து | நேரம் பதியும் எழுதுவினைஞர், அறவிடல் இணைக்கப்படுதல் உதவியாளர் |
| உள்நாட்டிறைவரி | நூலகப் பொறுப்பாளர் |
| கடற்றொழில் | கடற்றொழில் உதவியாளர், கடல் வள முகாமைத்துவ உதவியாளர் |
| சட்டவரைஞர் | மொழி பெயர்ப்பாளர், வெளியீட்டு உதவியாளர் |
| சிறுவர் நன்னடத்தை, பாதுகாவல் | தலைமை ஆசிரியர், தலைமை ஆசிரியை, நன்னடத்தை அலுவலர், மாணவ விடுதி ஆசிரியர், மாணவ விடுதி ஆசிரியை |
| உள்ளூராட்சி | கிராம கட்டுவேலைக் கண்காணிப்பாளர் (தொழில்நுட்பவியல் அலுவலர் IIஅ), புலனாய்வு அலுவலர், சனசமூக அலுவலர், உள்ளூராட்சி எழுதுவினைஞர், மொழிபெயர்ப்பாளர், காசாளர், சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர், பண்டசாலை அலுவலர் |
| அஞ்சல் | இணைந்த அஞ்சல் சேவையில் "அ" பிரிவில் III தரத்தில் "ஆ" பிரிவில் I ஆம் தரம், II ஆம் தரம் இலங்கை உப அஞ்சல் சேவை அலுவலர், இணைந்த அஞ்சல் சேவையில் அஞ்சல் சேவை அலுவலர் ஆI |
| செய்தி தகவல் மற்றும் ஊடகம் | தகவல் அலுவலர், பத்திரிகை அலுவலர், புள்ளிவிபரவியல் ஆய்வு அலுவலர், ஒப்புநோக்காளர் |
| பொது திறைசேரி | ஆய்வு அலுவலர் |
| நெடுஞ்சாலை | முன்னேற்ற உதவியாளர் |
| வர்த்தக, நுகர்வோர் விவகாரம் | நிறைகள், அளவுகள் பரிசோதகர், விலைக் கட்டுப்பாட்டு பரிசோதகர் (முன்னைய விலைக் கட்டுப்பாட்டுப் பரிசோதகர்) |
| மோட்டார் போக்குவரத்து | மோட்டார் வாகனப் பரிசோதகர் |
| மத்திய பிரதேச அபிவிருத்தி | அபிவிருத்தி அலுவலர், கிராம அபிவிருத்தி சிரேஷ்ட மேற்பார்வையாளர், சிரேஷ்ட கிராம அபிவிருத்தி உதவியாளர், கிராம அபிவிருத்தி உதவியாளர், கிராம அபிவிருத்தி அலுவலர் |
| இறப்பர் கட்டுப்பாடு | பரிசோதகர் |

| திணைக்களம்/அமைச்சு | தரம் |
|---|---|
| அரசகரும மொழி | ஆராய்ச்சி உதவியாளர், மொழிபெயர்ப்பாளர் |
| அரசாங்க அச்சகம் | ஒப்புநோக்காளர், அச்சக எழுதுவினைஞர் |
| அரசாங்க வழங்கல் | குத எழுதுவினைஞர் |
| நீர்ப்பாசனம் | ஆளணி அலுவலர் (தொழில்), செயல்திட்டமிடல் உதவியாளர், திட்டமிடல் உதவியாளர் |
| இலங்கை விமானப்படை | அத்தியட்சகர், சிவில் தாபனம் |
| உயர் நீதிமன்றம் | சுருக்கெழுத்தாளர் |
| நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சு | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், சுருக்கெழுத்தாளர், மொழி பெயர்ப்பாளர், வெளியீட்டு உதவியாளர் |
| சமூக சேவைகள் | வயோதிபர் மற்றும் வலதுகுறைந்தோருக்கான அரச இல்ல பொறுப்பாளர், சமூகசேவை அலுவலர், நலனோம்பு மற்றும் சமூக நலனோம்பு அலுவலர், வயோதிபர், வலதுகுறைந்ததோர் இல்ல பொறுப்பாளர் |
| கூட்டுறவு அபிவிருத்தி | விரிவுரையாளர், பொல்கொல்ல கூட்டுறவு கல்லூரி, கூட்டுறவு சங்க பரிசோதகர், மாவட்ட அலுவலர் |
| சுகாதார, வைத்தியசாலைகள் அமைச்சு | கொழும்பு மருத்துவமனைச் சபைச் செயலாளர், மருத்துவமனைச் செயலாளர், வரவு செலவு உதவியாளர், பொதுச் சுகாதார பரிசோதகர், திட்டமிடல், நிகழ்ச்சித்திட்ட அலுவலர், உணவு அட்டவணை எழுதுவினைஞர், வைத்தியசாலை விடுதி எழுதுவினைஞர், திட்டமிடல், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், புள்ளிவிபர ஆய்வு அலுவலர், தொழில் தொடர்பு அலுவலர், பண்டகசாலைப் பொறுப்பாளர் |
| தொகைமதிப்பு புள்ளிவிபரம் | புள்ளிவிபர ஆய்வாளர், புள்ளிவிபர அலுவலர் |
| கலாசார அலுவல்கள் அமைச்சு | கலாசார அலுவலர், உதவி சுவடிக் காப்பாளர், ஆவண ஆய்வு அலுவலர், ஆவண ஆய்வுகூட உதவியாளர், ஆவண அட்டவணைப்படுத்தல் அலுவலர், சுவடிக் காப்பு அலுவலர் (அட்டவணைப்படுத்திய) |
| புடவைக் கைத்தொழில் | முகாமை உதவியாளர் |
| கமத்தொழில் திணைக்களம் | பொருளியல் உதவியாளர், புள்ளிவிபர உதவியாளர், பட்டதாரி உதவியாளர், விவசாய ஆலோசகர் |
| ஏற்றுமதி கமத்தொழில் திணைக்களம் (முன்னர் சிறு ஏற்றுமதிப் பயிர்கள்) | அபிவிருத்தி உதவியாளர் |
| கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு | கைத்தொழில் பரிசோதகர் |
| உள்ளக வர்த்தகத்துறைத் திணைக்களம் | உள்ளக வர்த்தகத்துறை உதவி ஆணையாளர், உள்ளக வர்த்தகத்துறை பரிசோதகர் I ஆம் தரம் |
| வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சு | வீட்டு வாடகைச் சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரம்பெற்ற அலுவலர் |
| சகல அமைச்சுகள், திணைக்களங்கள் | பயிலுனர் பட்டதாரி செயற்றிட்டத்தின்கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அலுவலர்கள் |

(ஈ) மேலே 3(v) பந்தியில் குறிப்பிட்டுள்ள அடிப்படைத் தகைமைகளைப் பெற்றுள்ள மாகாண அரச சேவையில் பின்வரும் எந்தவொரு அலுவலரும் முகாமைத்துவ உதவியாளர், எழுதுவினைஞர், சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர், காசாளர், ஆவணப் பதிவாளர், மொழிபெயர்ப்பாளர், பண்டகசாலைப் பொறுப்பாளர், நூலகப் பொறுப்பாளர்

(உ) மேலே 3(v) பந்தியில் குறிப்பிட்டுள்ள தகைமைகளைக் கொண்ட மாகாண அரச சேவையிலுள்ள எந்தவொரு அலுவலரும்-

அரசிறைப் பரிசோதகர், தொழில் நலனோம்பு அலுவலர், நிறைகள், அளவுகள் பரிசோதகர், சலுகை அலுவலர், பதவிநிலை உதவியாளர், கொழும்பு மாநகரசபை அறக்கொடை ஆணையாளர், திணைக்களச் செயலாளர், ஒப்புநோக்காளர், முகாமைத்துவ அலுவலர், உள்ளூராட்சி அலுவலர், நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், நிகழ்ச்சித்திட்ட ஆய்வாளர்

(ஊ) மேலே 3(v) பந்தியில் குறிப்பிட்டுள்ள அடிப்படைத் தகைமைகள் பெற்று திணைக்கள பணிப்பாளர் நாயகத்தால் காலத்திற்குக்காலம் அனுமதிக்கப்பட்ட வேறு பதவிகளிலுள்ள அலுவலர்கள்.

7-951

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.